Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (10—5—50) வெளியூர் (11—5—50) [ இதழ் 248

# உலக அமைதிக்கு வழிகாட்டும் உத்தமர்கள் பேச்சு!

## இன்னல்களைத் தீர்க்க இருபதாண்டு திட்டம் தீட்டுகின்றனர்

## அரசாங்கம் ஆக்க வேலையில் ஈடுபட வேண்டுமென இதோபதேசம்!

## அமெரிக்க முதலாளித்வத்தின் "முதலைக் கண்ணீர்"

"இன்னும் இருபது ஆண்டுகளில், ஐக்கியநாடுகள் சங்கத்தின் மூலமும், திறமையுள்ள தரகர்கள் மூலமும் சமுதாய-பொருளாதாரத்துறைகளில் அமைதியை நிலைநிறுத்தும் சக்தி அரசாங்கங்களிடம் உள்ளது.

ஆசியா, ஆப்பிரிகா முதலிய பகுதிகளில் வாழும் மக்கள் பல நூற்றாண்டுகளாக வறுமையால் வாடி வதைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இது அவர்களுடைய தலைவிதியாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட நிலையை அவர்கள் இனி ஒருபோதும் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

இப்படிப்பட்ட அவலநிலையை மாற்றி அமைக்க, அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஓர் உலகத் திட்டம் வகுத்தாக வேண்டும்."

ஆகா! யார் இப்படிப்பட்ட உத்தமர்! உலக மக்களின் துயர் கண்டு, இங்ஙனம் அகங்குழைந்து, கசிந்து கண்ணீர் மல்கிய வண்ணம் கருத்துரை வழங்கும் இந்த உத்தமபுத்திரர் யார் என்பதை அறிய ஆவல் கொள்வது மனித இயல்பு. ஆம், ஆவல் கொள்ளத்தானே செய்வர். பசித்திருப்பவன் உணவு தேட முயல்வதும், நீர்வேட்கை மிக்கவன் நீர் அருந்த முயல்வதும் போல, அவல வாழ்வில் உழன்று கொண்டு, ஆறாது அழுது அழுது சமுதாய-பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து விடுபட நினைப்பது இன்றைய மனிதனின் இயல்பே யாகும்.

ஆனால், மேலே காணப்படும் கருத்துரைகள் அத்தனையும் மக்கள் எதிர்பார்க்கும் வண்ணம் பயன் தரக்கூடிய உரைகள் ஆகா, ஏனெனில், இந்தகருத்துரைகளைத்தந்தவர் உண்மையிலேயே உழைப்பாளிகளின் உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கும் ஆற்றல் படைத்தோரின் முகாமிலிருந்து பேசுபவரல்ல, தொழில் உலகில் துயர் அடைக்க முன் வந்தோர் போல் நடிக்கும் சூது மதியினரைக்கொண்ட முதலாளித்வ முகாமிலிருந்து கிளம்பும் மூலாம் பூசப்பட்ட உரைகள். இந்த உரைகள் வழங்கிய உத்தமர் யார் தெரியுமா?

அமைதியை நாடுவதாகச் சொல்லிக் கொண்டு, சாகசத்தைத் துணைகொண்டு மாஸ்கோவுக்குக் காவடி எடுத்துச் செல்லும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் தோழர் டிரிக்வெலி தான் மேற்கண்ட கருத்துரைகளை வழங்கியுள்ள கண்ணியர்!

எங்கே, எப்பொழுது இப்படிக் கூறியுள்ளார்?

மாஸ்கோ செல்லும் வழியிலே, ஜினிவாவில், உலக உடல்நலக் கழகக் கூட்டத்திலே இங்ஙனம்கூறியுள்ளார்.

பேசிய இடம் உடல்நலக் கழகம் என்ற காரணத்தாலோ என்னவோ, வறுமையின் கொடுமை, பசியின் பக்குவம் இன்னபிற விஷயங்கள் பற்றி எழிலுற பேசியுள்ளார்!

ஆசிய, ஆப்பிரிக்கப் பகுதிகளில் வாழும் மக்கள் வறுமையின் கொடுமையை இனி ஒருபோதும் சகிக்கமாட்டார்களாம்! அவர்களுக்கு ஆதரவு தர அவசரபடவேண்டுமாம். இது அந்த ஆபத்பாந்தவரின் அருள் மொழி!

அதே சமயத்தில்அத்தகைய வறுமைக் கொடுமைகளை ஒழிக்க ஐந்தாண்டு திட்டம் முதலில், பின்னர் இருபதாண்டு திட்டம் என்று, கால அளவைக் கணக்கிட்டுக் காண்பிக்கிறார்.

இத்தனை ஆண்டுகளாக ஏழைகளின் இடர் கண்ணில் படவில்லை. அமெரிக்க முதலாளி வர்க்கத்துக்கு இன்று தான் தென்படுகிறது போலும்!

இங்கிலையிலும் திட்டம் தீட்டுகிறார்களாம் திட்டம்! மக்களின் துயர்கண்டு கண்ணீர்விடும் இந்தக் கருணை வள்ளல்கள் தாம், குபேர பட்டணம் காண விழைகின்றனர், உலக உற்பத்திகளனைத்தும் ஒரு சாராரின் சுக வாழ்வுக்கே பயன்படும் வண்ணம் பொருளாதாரத் திட்டத்தை அமைத்துக்கொண்டும் சமதர்ம நாடான ரஷியாவை உலக நாடுகளுடன் விரோதியாகச் சித்தரித்துக் காட்டிக்கொண்டும், மற்றோர் உலகப் போருக்கு அச்சாரம் போட்டுக் கொண்டுமிருக்கின்றனர்.

இதே நேரத்தில் தோழர் டிரிக்வெலி கூறும் மற்றொரு காரணத்தையும் காணுங்கள்.

"உலக மக்களில் பெரும்பாலோர் நோயாலும், பசியா

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## திராவிட மொழிகளைக் கற்பதில் பிரிட்டிஷ் மாணவர் ஆர்வம்

### லண்டன் பல்கலைக்கழகப்பேராசிரியர் தரும் தகவல்

சென்னை. மே. 9—

தமிழ், தெலுங்குமொழியை கற்பதில் பிரிட்டிஷ் மாணவர்களிடையே ஆர்வம் இருக்கிறதென்றும், இந்தியாவுக்கு வருமுன் அநேக இங்கிலீஷ்காரர்கள் தமிழ் கற்றுக்கொண்டே வந்தனர் என்றும் லண்டன் சர்வ கலாசாலையில் இந்தியப் பேராசிரியரான டாக்டர் சி. எஸ். கே. பதி இன்று கூறினார்.

இந்தியக்கலை, கலாசாரம் இவை அயல் நாடுகளில் பரவுவதற்கான ஸ்தாபனங்கள், வெளிநாடுகளில் ஏற்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினர்.

இவர் லண்டன் சர்வகலாசாலையில் ஓரியண்டல், ஆப்ரிக்கன் பிரிவில் தமிழ் தெலுங்கு ஆசிரியராக சுமார் 20 வருஷ காலமாக இருந்து வருகிறார். இவர் இரண்டுமாத காலம் இந்தியாவில் தங்கிவிட்டு, பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்தபின்னர் லண்டன் திரும்ப உத்தேசித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:—இப்பதவியை 1929 நான்ஏற்றது முதற்கொண்டே இந்தியக்கலை, கலாசாரத்தைப் பற்றி அறிய பிரிட்டிஷ்காரர்களிடையே அதிக ஆர்வம் இருந்துவருவதைக் கவனித்து வந்திருக்கிறேன்.

இப்பொழுது சென்னை சர்க்கார் நிர்வாகத்திலுள்ள சிலர் உள்பட சுமார் 50 இந்திய ஸிவில் சர்வீஸ் சேவை செய்பவர்கள் தன்னிடம் கல்வி பயின்றவர்களே. இங்க ஆகஸ்டுகளில் சுமார் 500 பிரிட்டிஷ் மாணவர்களும் தமிழ் தெலுங்கு கற்றனர்.

இரண்டாவது உலகப் போருக்கு முன்பு, ஏராளமான மாணவர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து படித்தனர் என்றும், இப்பொழுது அவர்கள் எண்ணிக்கைக் குறைந்துவிட்டது என்றும் அவர் கூறினர்.

**தமிழ் கற்கவசதி**

லண்டன் சர்வகலாசாலையில் இண்டர்மீடியெட், பி. ஏ. (ஹானர்ஸ்) டிகிரி பரீட்சைக்கு தமிழ், தெலுங்கு பாடமாக வைக்கப்பட்டிருக்கிறதாம். இவைகளைப் படித்து டிலிட். பி. எச். டி பட்டமும் பெறலாமாம்.

## இந்தோசீனுவும் சிவப்பாகிறது!

—(0)—

### பர்மா-இந்தோசீன எல்லையில் செஞ்சீன துருப்புகள் குவிகின்றன

### சீக் கம்யூனிஸ்டுகள் உதவியினுல் போராட்டம் வலுக்கிறது

வாஷிங்டன், மே. 8—

இந்தோ சீனப்போரில் சீன கம்யூனிஸ்டுகள் நேரிடையாகவே ஈடுபடலாம்என்றும், ஹைனன் தீவு அவர்கள் வசமாகிவிட்டது செஞ்சீனவுக்கு பெரும் சாதகமாக இருக்கும் என்று, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஸயாம் மீது கம்யூனிஸ்டுகள் பாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று, இங்கு 'ஸ்காட்ஸ்மன்' பத்திரிகை எழுதுகையில் 'ஹைனன் தளத்தைக்கொண்டு சீன கம்யூனிஸ்டுகள்எவ்வளவோசெய்ய முடியும் என்றும், இதுவரை 70000 கம்யூனிஸ்டுத் துருப்புகள் இந்தோசீன, பர்மா எல்லையில் குவிந்திருக்கின்றன வென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

### கண்ணைக் கொடுத்த தியாகி

பாரிஸ், மே 9—

ஜெர்மானியருடன் ஒத்துழைத்ததற்காக சென்ற வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட மாரிஸ்பே, தான் சுடப்படுமுன் தன் கண்ணை குருடன் ஒருவனுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்படியே செய்யப்பட்டது.

## மனிதனின் ஆயுட்காலம் நீடிக்கிறது

—(0)—

### ஆண்களைவிட பெண்களே அதிகநாள் வாழ்கின்றனர்

—(0)—

### தற்கால விஞ்ஞானிகள் கருத்து

லண்டன், மே. 9—

100,000 வருஷங்களுக்குமுன் மனிதன் எவ்வளவு காலம் உயிருடனிருந்தானே, அதைவிட இப்பொழுது இரட்டிப்பு மடங்கு காலம் உயிருடன் இருந்து வருகிறான் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அக்காலத்து மனிதனின் சராசரி ஆயுட்கால வயது 29. 4 வருஷங்கள். இக்காலத்திய மனிதனின் சராசரி ஆயுட்கால வயது 61· 1 வருஷங்கள். ரோமர்கள் சராசரி ஆயுட்காலம்கூட 32 தானும்.

விக்டோரியா காலத்திலிருந்த பாட்டனார்களைவிட இப்பொழுதுள்ளவர்கள் 18. 4 வருஷ காலம் அதிகமாக உயிர்வாழ்கிறார்கள்.

இக்காலத்தில் ஆண்களைவிட, பெண்களே அதிக காலம் வாழ்ந்து வருகின்றனர்.

## ஆரியமாயை வழக்கு

### மீண்டும் ஒத்திவைப்பு

திருச்சி, மே 8—

ஆரியமாயை வழக்கு 8—5—50 அன்று சப் இன்ஸ்பெக்டருக்கு சம்மன் சார்வாகததனுல் மீண்டும் வழக்கை 22—5—50 தேதிக்கு ஒத்திவைத்துள்ளதாக தெரியவருகிறது.

# மாலை மணி

சென்னை 10—5—50 புதன்கிழமை


## மாதவனாரும் ஸ்ரீபெரும்பூதூரும்

சென்னை சர்க்கார் மந்திரிகளில் பெரும்பாலோர் பார்ப்பனர் அல்லாதார்; அவர்கள் அறிவு ஒளி வீசக்கூடிய ஒன்றையும் கூறிவிடுவதில்லையென்று 'பிரபல' பத்திரிகைகள் கருதுவதால், அவர்கள் சொற்பொழிவுகள் இருட்டடிக்கப்படுவது எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஒருவருக்குமட்டும் அவர்கள்—பத்திரிகை முதலாளிகள் பக்கம் பக்கமாக இடம் ஒதுக்குகிறார்கள்; பத்தி, பத்தியாகச் செய்தி பிரசுரிக்கிறார்கள். அந்த அமைச்சர் பேசுவது. அவர்களுக்கு ஆதரவாக இருப்பதால், அவர், அவர் இவர்களுடைய ஆழ்வார் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருப்பதால்.

“சமஸ்கிருதத்தை வட மொழி என்று சொல்வது நிற்க வேண்டும்; வடமொழி என்று சொல்வதால், வட இந்தியாவுக்கு எதிராகக்கிளர்ச்சியைக் கிளப்பிவிட சிலருக்கு சௌகரியமாக இருக்கிறது”

‘சமஸ்கிருதத்தால் பிரதேச மொழிக்கு ஏற்பட்டுவிட்டதென்று கூச்சல் போடுவதெல்லாம் வெறும் தேர்தல் தந்திரம்; அம்மொழியைப் பற்றித் தவறான எண்ணம் உண்டுபண்ணுகிறவர்களிடம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்”

“சமஸ்கிருதத்திற்கு எவ்வளவுதான் இடையூறுகள் நேர்ந்தாலும். அதற்குப் புத்துயிர் அளிக்க அவ்வப்பொழுது பெரிய மனிதர்கள் தோன்றுகிறார்கள்”

“ஸ்ரீராமானுஜர் பிறந்த க்ஷேத்திரமான ஸ்ரீபெரும்புத்தூர் வழியாகச் செலும் போதெல்லாம் எனக்குப் பக்திப்பரவசம் ஏற்படுகிறது.”

பேசுவது. அதுவும் ஒரு மந்திரியார் பேசுவது இவ்வாறாக இருந்தால், விளம்பரம் கொடுக்காமல் இருட்டடிப்பு செய்ய “மவுண்ட்ரோட் பத்திரிகைகளு”க்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது? நாம் எடுத்துக் கூறவேண்டிய அவசியமே இல்லை, பேசியவர் மந்திரியார் மாதவமேனனாகத்தான் இருப்பாரென்பதை.

மலையாள மொழியைத்தாய் மொழியாகக் கொண்ட தோழர் மாதவமேனன். சென்னை சர்க்காரின் கல்வி மந்திரியாவார். இவர் படித்த மொழி சமஸ்கிருதம்; மலபாரில் சமஸ்கிருதத்தில் முதன்மையாகத் தேறியவன் என்று வேறு பெருமை பேசிக்கொள்பவர். இவருடைய இரண்டு குமாரர்களையும் சமஸ்கிருதத்தைப் படிக்கும்படி செய்தவர். சமஸ்கிருதம் படித்தக் காரணத்தால், திராவிடராக இருந்தும் தாய் மொழிப் பற்றும், திராவிடப்பற்றும் இழந்து விட்டிருக்கிறார். இவர் பிராமணர்களின் தாஸானுதாஸராக இருந்த காரணத்தால், அதிக விளம்பரம் பெற்று மந்திரி பதவியொன்றும் பெற்றார். ராமகிருஷ்ண பைத்தியம் பிடித்த அவிநாசியார், கல்வி மந்திரிப் பதவியை இழந்த பின், தோழர் மாதவமேனனுக்கு அது கொடுக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்குப் பத்துபேர்கூட படித்தவர் இல்லாத நாட்டில், கல்வி மந்திரிப் பதவி மிக முக்கியமானது. எத்துறையில் கல்வி பயிற்றப்பட்டால் நாட்டு மக்கள் விரைவில் முன்னேறுவார்கள் என்பதை உணர்ந்தவர்களே. கல்வித் துறையின் நுணுக்கங்களை உணர்ந்தவர்களே இப்பதவி வகிக்கவேண்டும் அவிநாசியார் ஏற்படுத்திய குழப்பத்தை அதிகரிப்பதோடு, வேண்டாத இந்தியைக் கட்டாயப்பாடமாகத் திணிக்க முயலுவதா, செத்த மொழிகிய சமஸ்கிருதத்தைத் தெய்வீக மொழி யென்று கூறுகிறார் அடுத்துவந்த மாதவனார்.

இவர் இதுவரை பேசிவந்த வகை வேறு. இன்று கையாளும் முறை வேறு. வடமொழியானாலும் தெய்வீக மொழி, அதனால்தான் நான் படித்தேன், நீங்களும் படியுங்கள் என்று கூறினார் இதுவரையில் இன்று கூறுகிறார், வடமொழி யென்றே கூறுகிறீர்கள் என்று கூறுவதின் விளைவு வடநாடு-தென்னாடு என்று பேசுபவர்களுக்கு, கிளர்ச்சி கிளப்பிவிட முயற்சிப்போருக்கு சௌகரியமாக இருக்குமாம். கழுதையைக் குதிரையென்று பெயர் மாற்றிவிட்டால், அல்லது கழுதை என்று கூறாமல் இருந்தால் அதனுடையகுணம் மாறிவிடுமா, அல்லது நிறம் தான் மாறிவிடுமா?

ஒரு வாரத்துக்கு முன்பு பம்பாயில் பேசிய பார்ப்பனத் தோழர் சர் எஸ். வரதாச்சாரியார், “செத்தசமஸ்கிருதத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது ஆகாத காரியம், அது நடைபெறாது” என்று தெளிவடைந்த புத்தியோடு எடுத்துக் கூறினார். தோழர் வரதாச்சாரியார் காட்டிய காரணங்கள் “சமஸ்கிருத மொழி, வாழ்வுக்கானவகைகளைக் கூறாதது. வாழ்க்கை நலத்துக்குப் பயன்படாதது, பாமர மக்கள் கற்றுணர்ந்து ஏற்றுக்கொள்ளக் கூடியவகையில் இல்லாதது” என்பதாகும். இவ்வாறு விளக்கப்பட்ட மொழியைத்தான் மாதவமேனன் தமிழர், தமிழுக்குப் பதிலாகக் கற்கவேண்டுமென்று வளைத்து வளைத்துக் கூறுகிறார். சமஸ்கிருத மொழிக்கு ஆபத்து நேரும் போதெல்லாம், புத்துயிரளிக்கப் பெரிய மனிதர்கள் தோன்றுகிறார்கள் என்று, தோழர் மாதவமேனன் கூறுவது வேறுயாரையும் அல்ல, தன்னையேதான்! அவர்தானே இப்பொழுது சமஸ்கிருதத்தை வரதாச்சாரியார், செத்துவிட்டது, உயிர் பெற்று எழவே முடியாது என்று கூறும் வட மொழியை, வடநாட்டிலேயே காற்றில் விடப்பட்ட சமஸ்கிருதத்துக்குப் புத்துயிர்தர, ஆதரித்து வளர்க்க அவதாரம் செய்திருப்பவர்.

தோழர் மாதவமேனன் ஒரு அவதாரமென்பதற்கு ஆழ்வார் வழிவந்தவருக்கு இன்னும் அனேகச் சான்றுகள் உள்ளன. ஒன்று, அவர் சமஸ்கிருதப்பள்ளியின் ‘ஷஷ்டி அப்த பூர்த்தி’ விழாவில் கலந்துகொள்வதால் புளகாங்கிதம் அடைவது, இரண்டாவது ஸ்ரீராமானுஜர் பிறந்த க்ஷேத்திரமான ஸ்ரீபெரும்பூதூர் வழியாகச் செல்லும் போதெல்லாம் அவருக்குப் பக்திப்பரவசம் ஏற்படுவது.

வாரத்துக்கொருநாள் ‘திருத்தணிக்கு’ச் சென்று வந்து இரண்டுவாரங்களுக்கு ஒரு முறை ரமணரைத் தரிசித்து, மாதத்துக்கொருநாள் மௌன விரதம் இருந்த ஓமந்தூராருடன் மந்திரி சபையில் பக்தர்கள் பிரதிநிதித்வம் ரத்தாகிவிட்டதென்று எண்ணியிருந்தோம். இல்லை. அவர் வழி தொடர்ந்து நிற்கிறார். ஆழ்வார் மாதவனார். நல்லதொரு யோசனை கூறுகிறோம் மந்திரியாருக்கு ஸ்ரீபெரும்பூதூர் சென்னைக்கு 26 மைல் தொலைவில்தான் உள்ளது. பக்திப்ரவசம் வேலூர் வழியாகச் செல்லும் போதுமட்டும் பெற்று, பின்பு நீர் இழந்துவிடுவதை நாங்கள் விரும்பவில்லை. ஆகையால் அங்கே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, குடியேறி விடுங்கள். அன்றாடம் மோட்டாரில் சென்னைக்கு வந்து வேண்டுமானால் அலுவல்களைக் கவனிக்கலாம். சமஸ்கிருதத்தை வளர்க்கத்தக்க ஆலோசனைகூற அங்கே ஆழ்வார் பக்தகோடிகள் ஆயிரமாயிரமாக உள்ளனர். பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்தாலோ, அல்லது மந்திரி சபையில் ஏற்படும் மாறுதல்களாலோ பதவி இழக்கவேண்டி வந்தால், ராமானுஜர் திருவடிகளே சரணம் என்று ஸ்ரீபெரும்பூதூரிலேயே தங்கி விடலாம், மலபாருக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை!

## சென்னை சர்க்கார் வருமானம்

திருவண்ணாமலை, மே 10—

திருவண்ணாமலை நகராண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவில், நிதிமந்திரி கோபால் ரெட்டியார் பேசுகையில், சென்னை சர்க்காரின் இப்போதைய வருட வருமானம் ரூ 56 கோடியென்று தெரிவித்தார் தோழர் ராஜகோபாலாச்சாரியார் பதவி ஏற்றபோது வருமானம் ரூ 16 கோடியாக இருந்ததென்றும், பதவி விட்டபோது ரூ 18 கோடியாக இருந்ததென்றும் அவர் கூறினார். 1946-ல் கலால் வரி மூலமாக ரூ 30 கோடி சென்னை சர்க்கார் வருமானமாக இருந்ததென்று தோழர் கோபால் ரெட்டி கூறினார். (ந—நி)

போர்க்களம்

## ‘கோழை சுவர்க்கம்!’

[சொல்லம்பு]

இதென்னய்யா வேடிக்கை! வீரசொர்க்கமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே அன்றி கோழை சுவர்க்கம் என்று கேள்விப்பட்டதே இல்லையே! என்கிறீர்களா? ஆம், கேள்விப்பட்டே தான் இருக்கமாட்டீர்கள்.

ஆனால் எனக்கு அப்படி இல்லை. எப்பொழுது வீர சொர்க்கம் என்று ஒரு சுவர்க்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அப்படியே கோழை சுவர்க்கமென்றும் இருந்துதான் தீர வேண்டும் என்பது என்னுடைய வாதம். ஏனெனில் நான் ஒரு சமதர்மவாதி! எப்படி பணக்காரன்—ஏழை—முதலாளி—தொழிலாளி, மேல் ஜாதி-கீழ்ஜாதி என்பதெல்லாம் சமுதாயத்தில் வேற்றுமை இருக்கக்கூடாது என்கிறேனோ அது போலவே இந்த மேலுலகத்திலும் புண்ணியர்களுக்கு சுவர்க்கம் என்று ஒரு இடமும், அதில் வீரர்களுக்கென தனி இடமும் ஒதுக்கப்பட்டிருப்பதுபோல கோழைகளுக்கும் ஓர் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் திடீரென எனக்குத் தோன்றியிருக்கிறது. ஏன் தெரியுமா?

நமது சென்னை சட்டசபை சபாநாயகர் இருக்கிறாரே அவர் சொல்லுகிறார் உயர் ஜாதிக்காரர்களுக்குப் பயந்து கொண்டு ஹரிஜனங்கள் இந்து மதத்தை விட்டு வெளியேறுவது கோழைத்தனம் என்று.

இந்துமதக்கொடுமைகளினின்று விடுபட முடியாத மக்களே இன்றையத்தினம் ஹரிஜனப்பட்டம் பெற்று சேரிகள் என்னும் இடங்களில் ஒதுக்கப்பட்டு புழுக்களென வாழுகின்றனர். இந்துமதம் இது சமயம் அவர்களுக்கு விடுதலை அளிக்க முன்வரவில்லை — முன்வரவும் முடியாது. ஏனெனில் இந்து மதத்தில் வர்ணாஸ்ரம தர்ம முறை உள்ள வரை ஹரிஜனங்களுக்கு இந்நிலைமை இழிநிலை இருந்தே தீரும். வேண்டுமானால் அவர்கள் சிவசண்முகனார் அதாரிட்டி கோழைத்தனம் நீங்கிய வீரர்களாக இருக்கலாம். ஆனால் மனிதர்களாக வாழமுடியவில்லை என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அதே நேரத்தில் இந்த ‘இந்து மதம்’ என்ற சிறையிலிருந்து விடுபட்டவர்கள் மனிதர்களாக வாழமுடிகிறது என்பதை நினைக்கும்போது சிவசண்முகனார் கூறும் “கோழைத்தனம்” வரவேற்கப்பட வேண்டிய தொன்று என்பதைத்தவிர வேறென்ன சொல்லமுடியும்?

வீரர் பட்டம் பெற்றுக்கொண்டு வேதனையிலும், அறியாமையிலும், ஆணவக்காரர்களின் அடிமைகளாக வீழ்ந்து வாழ்வதை விட ‘கோழை’ பட்டம் பெற்று மனிதனாக ஏன் வாழக்கூடாது! எனவேதான் அப்படிப்பட்டவர்களுக்கு மேலுலகில் “கோழைகள் சுவர்க்கம்” ஒன்று திறக்கப்படவேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குத் திறப்புவிழா செய்வது யார் என்ற கவலை யாருக்கும் வேண்டாம். அதற்கு நமது டாக்டர் அம்பேத்கார் இருக்கவே இருக்கிறார். புத்தமதப் புதுப் பாதையை தாழ்த்தப்பட்டோருக்குக் காட்டுவதில் முனைந்திருக்கிறார் அப் புண்ணியவர். அவரது அரும் முயற்சியின் பயனாகவேனும் நமது ஹரிஜனத் தோழர்கள் நான் மேலே குறிப்பிடும் “கோழை சுவர்க்கம்” அடைவார்களாக!

## மூவர் மாநாடு

### கம்யூனிஸத்தை ஒழிக்குமாம்!

கெய்ரோ, மே 9—

மத்ய கிழக்கில் கம்யூனிஸம் பரவுவது பற்றி வியாழனன்று லண்டனில் ஆரம்பமாகும் மூவர் மாநாட்டில் ஆலோசிக்கப்படும் என்று தெரிகிறது.

ஈராக், ஸிரியா, லெபனான் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்த யுனைடெட்ஸ்டேட்ஸ் ஸ்தானிகர் ஜெப்பாஸன்காப்ரியின் ரிப்போர்ட் அசீஸனின் உபயோகத்திற்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிகிறது.

## மலேரியா ஒழிப்புத் திட்டம்

ஜினிவா, மே 9—

இங்கு ஆரம்பமாகியுள்ள சர்வதேச சுகாதார மாநாட்டில் மலேரியாவை ஒழித்துக்கட்டும் வழிகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

நோயற்ற வாழ்வை ஏற்படுத்துவதின் மூலமே உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதினாலேயே இந்த மலேரியா ஒழிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## அவர்களிடையே பிளவாம்!

லண்டன், மே. 9—

மேற்கு ஜெர்மன் கம்யூனிஸ்டுகளிடையே பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த டிட்டோயிஸ்டுகள் ரூரில் மட்டுமின்றி, பவேரியா, ஹெஸ்ஸி முதலிய இடங்களிலும் அதிகரித்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

## நிறங்களின் உதவியால் நோய் நீக்கும் முறை!

லண்டன், மே 9—

வைத்திய சிகிச்சை ஒவ்வொன்றின்போது வெவ்வேறு வர்ணங்கள் பூசப்பட்ட அறை உபயோகிக்கப்படுவது நல்ல பலனைத் தரும் என்று, பிரிட்டிஷ் வைத்திய நிபுணர் தோழர் வில்ஸன் கூறுகிறார்.

ஆப்ரேஷன் செய்யும் அறைகள் லேசான பச்சை வர்ணம் கொண்டதாக இருக்கவேண்டுமாம். குறைந்த ரத்தக் கொதிப்புள்ளவர்கள் குங்கும கலர் அறையிலும், அதிக ரத்தக் கொதிப்புள்ளவர் நீல நிற அறையிலும் சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்றும், சிகிச்சைக்காக காத்திருப்பவர்கள் ஊதா வர்ண அறையில் காத்திருக்க செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார்.

## ரப்பர் உற்பத்தி அதிகரிப்பு

லண்டன், மே 9—

இவ்வாண்டு இந்தோனேஷ்யாவின் தேயிலை, ரப்பர் உற்பத்தி அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேஷ்யா சுதந்திரம் பெற்று, அதனிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதே இந்த உற்பத்தி அதிகரிப்புக்கு ஒரு முக்கிய காரணம் என்று, சர்வதேச ரப்பர் மகாநாட்டின் இந்தோனேஷ்ய பிரதிநிதிகள் கூறுகிறார்கள்.

## மீன்பிடிக்கும் படகு மடக்கப்பட்டது

ஸ்டாக்ஹோம், மே 9—

சென்ற பிப்ரவரியில் இரு ஸ்வீடிஷ் மீன்பிடிக்கும் படகுகளை ரஷ்யா மடக்கியதைக் குறிப்பிட்டு, ஸ்வீடிஷ் சர்க்கார் ஸோவியத் சர்க்காருக்கு ஒரு கண்டனக் குறிப்பை அனுப்பியிருக்கிறது.

# உழைப்பாளிகளை ஒன்றுபடச் செய்வதே தி. மு. கழக நோக்கம்

## சமுதாயத் துறையிலுள்ள முதலாளித்வமும் ஒழிய வேண்டும்

## வடநாட்டு முதலாளித்வத்திடமிருந்து விடுபட வழிகோலுக!

### பொன்மலை மே தின விழாவில் அன்பழகன் ஆற்றிய சொற்பொழிவு

1—5—50 திங்கள் மாலை 7-மணிக்கு—பொன்மலை தி. வாலிபர் கழக 9-ம் ஆண்டு விழாவும், மேதின விழாவும், பொன்மலைப்பட்டி மாவு மில்லுக்கு அருகில், அலங்கரிக்கப்பட்ட அழகிரி மேடையில், டல்லாயிரக் கணக்கான தொழிலாளரும் பொது மக்களும் திரண்டிருந்தனர்.

செயலாளர் ஏ. கோவிந்தசாமி முன்மொழிய, சி. எஸ். ராஜூ வழிமொழிய தோழர் ஜி பராங்குசம் தலைமை வகித்து, தமது முன்னுரையில், கழக விழாவை—கழகத் தோட்டத்தில் நடத்த முடியாத நிலையை விளக்கியும், கழகப்பணி தொடர்ந்து நடைபெறும் என உறுதி கூறியும், மே விழா எப்படித் தொழிலாளருடைய இலட்சிய நாள் என்று எடுத்துக் காட்டியும் பேசி முடித்தார். அடுத்து செயலாளர் ஏ. கோவிந்தசாமி ஆண்டு அறிக்கையைப்படித்த பின்—தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசினார். அவர் பேசுகையில், தொழிலாளர்கள் துயரம் நாளும் வளர்ந்து வருவதையும், ஆட்சியாளர் ஆளும் திறமையற்று நாட்டையே நாசப் பாதையில் இழுத்துச் செல்வதையும், அவர்களின் எதேச்சாதிகாரப் போக்கால் விளையும் கொடுமைகளையும் விளக்கிக் காட்டி, தொழிலாளர், மற்ற மக்களைப் போன்று நல்வாழ்வு பெற—உரிமைப் போர் நடத்தியாக வேண்டுமெனவும், மேநாள் கொண்டாடுவதன் மூலம் ஒன்று பட்டாக வேண்டுமெனவும் உணர்ச்சி ததும்ப விளக்கிக் கூறினார்.

அடுத்துத் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாவது:—பொன்மலை திராவிட வாலிபர் கழகம், கடந்த ஒன்பது ஆண்டுகளாகவே தொழிலாளர்கள் கவலையைக் கருதி நீதிக்கும் நியாயத்திற்கும் போராடி வந்துள்ளதைப் பொது மக்கள் அறிவர். அதன் சார்பில் மேதினம் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமாகும். மேதினத்தின் அவசியத்தை நம் நாட்டுத் தொழிலாளர்களே இன்னும் பூரணமாக உணரவில்லை என்றால் மற்ற மக்கள் சரியாக உணர்ந்து கொள்ளாதது வியப்பாகாது.

**நாடெங்கும் மே விழா**

"மேதினம்" தொழிலாளர் முன்னேற்றங் கருதும் நாள் மட்டுமாகாது, ஏழை, செல்வர் என்ற பேதமற்ற புது சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் நாளுமாகும். சென்ற நூற்றாண்டில், அமெரிக்காவில், தொழிலாளர்கள் ஒன்று திரண்டு தம் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் எதிரொலியாக, அன்று அங்கு ஆட்சிப் பீடத்தில் ஏறி இருந்த முதலாளித்வ சர்க்கார் பலரைச் சுட்டுக் கொன்றது. நான்கு பேரைத் தூக்குமேடை ஏற்றியது. தொழிலாளர் தலைவர்களைச் சித்திரவதை செய்தது. அந்தக் கொடுமையின் விளைவாகவே 'உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்' என்ற முழக்கமும், ஒவ்வோர் ஆண்டும் மே தினத்தைக் கொண்டாட வேண்டும் ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளரும் என்ற தீர்மானமும்; பாரிசில் கூடிய, சர்வதேச சமதர்மவாதிகள் மாநாட்டில் கொண்டு வரப்பட்டு நிறைவேறின. அதன் விளைவே இன்று, தொழிலாளரின் நல்லாட்சி நடைபெறும் நாடுகள் முதல், முதலாளிகளின் பொருளாட்சி நடைபெறும் நாடுகள் வரை மேதினம் கொண்டாடப்படுகிறது.

**ஒத்துழைத்தே வந்துள்ளோம்**

அமெரிக்காவில் பல தடைகளும், ஆங்கில நாட்டில் இடையூறுகளும் ஏற்பட்டாலும், தொழிலாளர்கள்—மேதினம் கொண்டாடாமல் இல்லை. நமது நாட்டிலும், தொழிலாளர் இயக்கங்கள் எல்லாம் உரிமையற்றுக் கிடந்தாலும், தி. மு. கழகம், பல இடங்களிலேயும் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

தி மு கழகம் நேரடியாகத் தொழிலாளர் இயக்கங்களை ஏற்று நடத்தாவிட்டாலும், தொழிலாளர் நலன் நாடி, அவர்களது நேர்மையான போராட்டங்களில் ஒத்துழைத்தே வந்துள்ளது. அது மட்டுமன்றி, ஒன்று திரட்டப்பட முடியாது சிதறுண்டு கிடக்கும், டலவகைப்பட்ட ஏழை உழைப்பாளர்களையும், திருவாரூர்களுக்கொருவர் காட்டும் ஆதரவால், பற்றுதல் ஒன்று படச்செய்து, பொதுமக்களின் ஆதரவையும் திரட்டிக்காட்டியுள்ளனர்.

**சக்திக்கேற்ற உழைப்பு**

மேலும், நாட்டுமக்களும், உழைப்பாளிகளும், உண்மையான இலட்சியத்தையே உணராமல், புரிந்துகொள்ளாமல், சிறிதளவு கூலி உயர்வு, சில நாள் ஓய்வு ஆகியவையே இலட்சியம் என்று கருதியுள்ள தவறான கருத்தை மாற்றி, இவையெல்லாம் கருவிகளாக, படிகளாகக் கொண்டு, எல்லோரும் சமமாக இன்புறக்கூடிய நல்வாழ்வை, உயர் நிலையை எய்துவதே இலட்சியம் என்பதை விளக்கி வருகின்றோம்.

மனிதன் — எல்லோரும் சமம் என்பது — உண்மையானால், பாரதியார் பாடியதைப்போல எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆகாவிட்டாலும், மக்கள் ஆக வேண்டுமானால் கூட, சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற வசதி, என்ற தத்துவம் ஒப்புக்கொள்ளப் பட்டாக வேண்டும்.

**அரசியலில் நாம் ஈடுபடுவதேன்?**

இன்றோ, "சாதிக்கேற்ற உழைப்பு—பணத்துக்கேற்ற வசதி" என்ற தந்திரமான முறை, நிலைநாட்டப்பட்டுள்ளது. பிறப்பினாலே முதலாளியாகின்றவன் ஒருபுறம், பொருள் வழியாலே மேலும் மேலும் முதலாளியாகின்றவன் ஒருபுறம்; உழைத்தும் உடலன்காணாது வாடுபவன் பக்கத்திலே சாதிகாரணமாகச் சேரியிலே ஒதுக்கப்பட்டவன் உள்ள காட்சி மற்றொரு பக்கம்.

இந்நிலை மாறவேண்டுமென்ற எண்ணத்தால்தான், பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி, சமூகத்துறையிலும் உள்ள முதலாளித்வத்தை முறியடிக்க—தி. மு. கழகம் எந்த விதமான டலாத்காரமுமின்றி — பணியாற்றி வருகிறது.

சமூகமும், பொருளாதாரமும், அரசியலோடு இணைக்கப்பட்டு அவைகளுக்கு, அரசியலே பெருந்துணையாக அமைவதாலேயே, அரசியல் குறித்தும் நாங்கள் பாடுபட வேண்டியிருக்கிறது.

**சிண்டைக் கொடுத்துவிட்டு....!**

நமது நாடு பழமை விரும்பிகள் கையில் சிக்கியுள்ளதால், சாதி மத—ஆதிக்க வாதிகளுக்கு வலிவும், பணம் படைத்தவர்கள் பிடியில் சிக்கியுள்ளதால்— முதலாளிகளின் ஆதிக்கமும் வளர்ந்தவண்ணமிருக்கிறது ஏழை பங்காளராம் காந்தியின் சீடர்களே, ஏழைகளின் சோற்றுக்கே பங்காளர்களாக மாறி, பணப் படைத்தோரின் பங்காளவாசிகளாக மாறிவிட்டனர். இந்நிலையில் இவ்வளவு பெரிய துணைக்கண்டம், ஒரு சில முதலாளிகளின் விருப்புக்கும், வெறுப்புக்கும் ஆடும் நிலை ஏற்பட்டுள்ளது. முதலாளிகள், தங்கள் மார்க்கெட், எங்கு தடை இன்று வியாபாரம் செய்யக்கூடிய நாடு மிகப் பெரியதாக இருப்பதால், ஏராளமான இலாபத்தைக் குவிக்கின்றனர். நாட்டின் ஒரு பகுதியைச் சுரண்டி, மற்றொரு பகுதியில் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்கின்றனர் என்பது மட்டுமின்றி, அந்தக்கொள்கை தொடர்ந்து நடக்க சர்க்காரையே—தங்கள் பிடியில் வைத்துக் கொண்டுள்ளனர். இன்றைய ஆட்சியினர் இங்கே உள்ள முதலாளிகளிடம் மட்டுமின்றி, அமெரிக்க முதலாளிகளிடமே கூட தம் சிண்டைக் கொடுத்துவிட்டு நாட்டைக் காப்பாற்ற முயற்சிக்கின்றனர். இந்நிலையில்—நம் தென் நாட்டிலே உள்ள ஏழைகள் நல்வாழ்வு பெறவும், தொழிலாளர் உயர்வடையவும், சமதர்மம் தழைக்கவும்—வடநாட்டு முதலாளிகள், ஏகாதிபத்யவாதிகளிடமிருந்து தென்னாடு, விடுதலை பெறுவது அவசியமாகிறது. எனவேதான், தொழிலாளர் நன்மைக்காக மேதினம் கொண்டாடும் நாங்கள், திராவிட நாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்தை நினைவூட்டுகிறோம், வாழ்க திராவிடம்! ஓங்குக சமதர்மம்!

தோழர் அன்பழகன் அவர்கள், சுமார் 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றி, முடிவில் கேள்விகளுக்குத் தக்க பதிலளித்த பின் தலைவர் பராங்குசம் அவர்கள் முடிவுரை கூற, செயலாளர் நன்றி கூற, வாழ்த்தொலியுடன் இரவு 9-30 மணிக்கு விழா இனிது முடிந்தது.

## உலக சைக்கிள் பந்தயம்

(0)

## சென்னைவாசி மணி செல்லுவார்

(0)

### தமிழர் ஆதரவைக் கோருகிறார்



தென்னாட்டு சைக்கிள் வீரர் தோழர் பி. எஸ். மணியின் திறமை பற்றிய விவரங்கள் முன்னரே 'மாலைமணி'யில் வெளிவந்துள்ளதைத் தோழர்கள் அறிவர். இப்பொழுது அவர் உலக சைக்கிள் போட்டிப் பந்தயத்தில் பங்கு கொள்ள பண உதவி நாடி நிற்கிறார். பலருடைய ஆதரவைப் பெற்றும் வருகிறார். தமிழருடைய ஆதரவு மேலும் தேவைப்படுகிறது.

ஆகஸ்டு மாதத்தில் புருசெல்ஸில் நடைபெறவிருக்கும் உலக சைக்கிள் பந்தயத்தில் சென்னையைச் சேர்ந்த தோழர் பி. எஸ். மணி பங்கு கொள்ளவிருக்கிறார்.

இதற்காக தோழர் மணி தேசிய சைக்கிள் கழகத்திற்கு, 4,500 ரூபாய் அனுப்பவேண்டியிருக்கிறது. மணி, வேலை பார்க்கும் கிராம்டன் எஞ்சினீரிங் கம்பெனியின் நன்முயற்சியின் பயனாக இது வரையும் 2000 ரூபாய் அவருக்குக் கிடைத்திருக்கிறது. அதே கம்பெனி மேலும் 1000 ரூபாய் சேகரித்துத் தரவும் சித்தமாக இருக்கிறது. எனவே மீதம் உள்ள தொகையான 1,500 ரூபாயைத் திரட்ட வேண்டிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார் மணி.

எம். யு சி, எம். சி சி, ஜிகானா சிள போன்ற பந்தயக் கழகங்களின் உதவியும் நாடப்பட்டிருக்கிறது. வேறு பல கழகங்களும், பொதுமக்கள் பலரும் தோழர் மணிக்கு ஆதரவு தர முன்வந்துள்ளனர்.

மணி ஒரு தென்னாட்டவர், அதிலும் தமிழர். இத்தகைய ஒரு தமிழர் உலகப் பந்தயமொன்றில் பங்குகொண்டு வெற்றி பெறுவது தமிழகத்தின் வெற்றியாகும் எனவே, பந்தயங்களில் பற்றும், ஆர்வமும் உள்ளவர்கள தம்மாலியன்ற உதவியை அன்னாருக்கு அனுப்பி வைப்பது நலம்.

அவரது தேவை ரூ 4500. இதுகாறும் நன்கொடையாகக் கிடைத்துள்ள தொகை ரூ 3000. மேலும் தேவைப்படுவது ரூ 1500.

நன்கொடை அனுப்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

பி. எஸ். மணி,
C/o தி. கிராம்டன் எஞ்சினீரிங் கம்பெனி சென்னை.

## நியூஜிலாந்தில் படை திரளுகிறது

லண்டன், மே, 9—

ராணுவப் பயிற்சிபெற படைக்கு ஆள் சேர்ப்பதில் நியூஜிலாந்து முனைந்திருக்கிறது. 14 வாரப் பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சேரவேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான காலத்தில் படைக்கு ஆள்சேர்க்கும் நாடு பிரிட்டனுக்கு அடுத்தபடியாக நியூஜிலாந்துதான்.

## சதித் திட்டங்களை தடுக்க சட்டம்

நைரோபி, மே 9—

துரோக வேலைகள், சதிச் செயல்கள் இவைகளைத் தடுக்கவும், முக்கியமாக கம்யூனிஸ்டுகளை ஒடுக்கவுமே கென்யா, உகண்டா, டாங்கனிகா நிலைகளின் சர்க்கார்கள் கூட்டாக சட்டங்களைச் செய்திருக்கின்றன.

ஸ்தாபனங்களைத் தடைசெய்வது, அச்சுக்கூடங்களைக் கைப்பற்றுவது, யூனிபாரம் உடைகள் அணிவதைத் தடுப்பது முதலிய அதிகாரம் இச்சட்டங்கள் மூலம் இந்த சர்க்கார்களுக்குக் கிடைக்கின்றன.

(ஞேனோ

## ஆஸ்திரேலியாவில் ராணுவப் பயிற்சி

லண்டன், மே 9—

ஆஸ்திரேலிய ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க திறமையுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகளின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளும் யோசனை, பத்திரிகைகளில் காணப்பட்டதே யொழிய உத்தியோகப் பூர்வமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆஸ்திரேலியாவிடமிருந்து இத்தகைய கோரிக்கை இன்னும் எதுவும் வரவில்லை.

ஆஸ்திரேலிய தேசிய சர்வீஸ் திட்டப்படி பயிற்சியளிக்க 4500 பிரிட்டிஷ் துருப்புகள் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்படலாம் என்று கூறப்படுகிறது.

## ரோம் மீது பறக்கும் தட்டுகள்

ரோம், மே 9—

ரோமில் ஆகாயத்தில் காணப்பட்ட மூன்று வெள்ளிப் புள்ளிகள் பறக்கும் தட்டுகள் என்று அனுமானிக்கப்பட்டதின் பேரில், அதைக் காண ஏராளமான கூட்டம் கூடிவிட்டது இதனால் போக்குவரத்து ஒரு மணி நேரம் தடைப்பட்டது.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

# கட்டிட நிதிக்கு

## உங்கள் காணிக்கை எங்கே?

ஆர்வ மிகுதியை
அன்பளிப்பு மிகுதியால் காட்டுங்கள்!

## உடனடித் தேவை 10,000!

ஆக்கவேலைக்கு ஆதரவு தாரீர்!

கடமையைச் செய்வீர்!
களிப்பு அடைவீர்!!


## உலக அமைதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் வாடும்போது அமைதி. சமாதான என்பதெல்லாம்பய னற்றதும்பயங்கரமானதுமாக இருக்கும்" என்கிறார். அவர்.

உலகமக்களில் பெரும் பாலோர் நோயாலும், பசியாலும் வாடுகிறார்களாம்; அத்தகைய பெரும்பிணிக்கு டிரிகில்வி குழுவினர்தரும் மருந்து டாலர் தானம்! தலைவலிக்கு அத்தைலம் தடவுவது போல.

அதுமட்டுமல்ல, இந்த டாலர் தாளம் உலகின் வறுமைப் பிணியை ஓட்டும் மருந்து என்று சொல்லும் அதே நோத்தில், அதனை சமதர்மக் கோட்டையைத்தகர்க்க வல்ல பீரங்கியாகவும் பயன் படுத்தி வருகின்றனர் இந்த சிலர்கள்.

"அரசாங்கங்கள் தம்முடைய சக்தியை அரசியல் சண்டைக்குப் பயன் படுத்தாமல், அமைதியை நிலை நாட்டப் பயன் படுத்தவேண்டும்.

இதுவும் அதே தோழர் டிரிகில்வியின் பேச்சிலே காணப் படும் மற்றொரு சாகச சரக்கு!

தோழர் டிரிகில்வியின் பேச்சுப்படியே பார்ப்போம். அமெரிக்க சர்க்கார் தம்முடைய ஆற்றல், செல்வம் ஆகியவற்றை எதெற்குப் பயன்படுத்துகிறார்கள். உலக அமைதிக்கா? உழைப்பாளிகளின் முன்னேற்றத்துக்கா? இல்லையே!

அணுக்குண்டுஆராய்ச்சிக்கு அள்ளி அள்ளி வீசுகின்றனர் கோடிக்கணக்கிலே.டாலர்களை எந்த நாட்டைப்பார்த்தாலும், அங்கு அமெரிக்க ஆயுதமோ, படையோ இல்லாதிருப்பதில்லை. எப்பக்கம் நோக்கினும் அமெரிக்காவின் ஆர்ப்பாட்டம்! இந்தநிலையிலே இதரமொழி பேசுகிறார் தோழர் டிரிகில்வி பேசட்டும்; ஆனல் பேச்சுப்பயன் உடைய பேச்சாக இருக்கப்போவதில்லை என்பது உறுதி. உள்ளத்திலே மோசம், உதட்டிலே நேசம் என்ற முறையிலே எவ்வளவுதான் பேசியும் என்ன பயன்?

## இனி நடப்பவை

சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை:— தி. மு. க. செயற்குழு கூட்டம் 11-5-50 இரவு 8 மணிக்கு லாசர் சின்னத்தம்பி தெரு 4-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். உறுப்பினர்களை வரும் தவறாது வருமாறு தோழர் டி. [illegible] கேட்டுக்கொள்கிறார்.

* * *

ஆற்காடு:— பஞ்சாயத்துப் போர்டின் அறிக்கையைக் கண்டித்துப் பேச, சர்வ கட்சி கண்டனப் பொதுக்கூட்டம், பெரியார் மைதானத்தில் 11-5-50 மாலை நடைபெறும். அதுபோது சோஷலிசக் கட்சியின் சார்பில் தோழர் எ.எல். சீதாராமன், தி. மு. க. சார்பில் புலவர் ஆ. மணிஎழிலன், வள்ளுவர் கழகச் சார்பில் தோழர்பி என். சிவசங்கரன், பெடரேஷன்சார்பில் தோழர் உக்கிரபாணி, தி. க. சார்பில் தோழர் இளசுப்பன், திருக்குறள் கழகத்தின் சார்பில் தோழர் இளங்கோ அவர்களும் பேசுவார்கள்.

* * *

சென்னை, கோமலீஸ்வரன் பேட்டை:—முன்னேற்றக் கழகத்தின் வாராந்திர குறள் வகுப்பின் சார்பாக வித்வான் ஆர். நடேசனார் அவர்கள் 'அருள் உடைமை' என்னும் பொருள் பற்றி 10-5-50 மாலை 7-மணியளவில் வகுப்பு நடத்துவார். இடம்:—68, ஹாரிஸ் ரோடு, சென்னை-2.

## ரஷ்யா—ஆஸ்திரேலியா யுத்தம் ஏற்பட்டால்...?

சிட்னி, மே 9—

ரஷ்யாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்குமிடையே யுத்தம் என்று ஏற்பட்டால், ஐந்தாம்படை வேலை செய்யவும், சதி வேலைகளைச் செய்யவும் சுமார் 2000 கம்யூனிஸ்டுகள் சித்தப்படுத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஆஸ்திரேலிய சர்க்காருக்கு ருசுக்கள் கிடைத்தது.

இது சம்பந்தமான உத்திரவுகள் ரஷ்யாவிலிருந்து ஸ்தானிகராலய மூலமாகவே கிடைத்து வந்ததென்றும் கூறப்படுகிறது.

### உலக ஸ்டாம்பு கண்காட்சி

#### கெய்ரோவில் நடைபெறும்

லண்டன், மே 9—

அடுத்த ஆண்டு சர்வதேச ஸ்டாம்பு கண்காட்சி, கெய்ரோவில் நடைபெறவிருக்கிறது. எகிப்து மன்னர் பரூக் ஸ்டாம்பு சேர்ப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவர். அவருடைய ஸ்டாம்பு தொகுப்புகளும் இக்காட்சியில் இடம்பெறும்.

## அமெரிக்காவின் கவலை அதிகரிக்கிறது

லண்டன், மே 9—

வியாழனன்று ஆரம்பமாகப் போகும் மூவல்லரசு கூட்டத்தில் தென்கிழக்கு ஆசியா, ஜெர்மனி விஷயங்கள் பூராவாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது. தென்கிழக்கு ஆசியாவிலுகளில்கம்யூனிஸம் பரவாமலிருக்கவேண்டுமே என்ற கவலை அமெரிக்காவிற்கு இருந்து வருகிறது. முக்கியமாக கொரியா, பிலிப்பைன் மற்றும்இதர இடங்கள் பெரும் கவலையை அளித்திருக்கின்றன.

மலேயாவில் கலகத்தை அடக்க ராணுவ உதவியை அளிக்கும்படி அமெரிக்கா கேட்காதென்றும், மாலைக் மாக்டனால் ஆஸ்திரேலிய பிரதமர் மென்ஸிஸுடன் ஆஸ்திரேலிய அருப்புகளை அனுப்புவது சம்பந்தமாக பேசலாம் என்று பிரிட்டிஷ் ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மூவல்லரசுகள் தங்கள் கவனத்தை ஐரோப்பாவை விட கிழக்கு வழியிலேயே அதிகமாகக் கவனம் செலுத்தும் முடிவை செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ரூயேட்டர்)

## பஸிபிக் நாடுகள் மாநாடு

சிட்னி, மே. 9—

பஸிபிக் நாடுகளின் மாநாடு ஒன்று இவ்வாண்டுக் கடைசியில் நடைபெறும் என்பதை, சிட்னி மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள பிரிட்டிஷ் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் லார்ட் மாக்டனால்டு கூறினார். அநேகமாக இம்மாநாடு 6-மாத காலத்திற்குள் நடைபெறுமாம்.

இந்த மாநாட்டில் இந்தியா, யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரான்ஸ், பாகிஸ்தான், இதர டொமினியன் கலந்துகொள்ளும் பஸிபிக் உடன்படிக்கை ஏற்பட இது முதல் படியாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## முன்ஷி இந்தியா திரும்புகிறார்

லண்டன், மே 9—

இந்திய சர்க்காரின் மந்திரியாக இருந்த தோழர் கே. எம். முன்ஷி லண்டனில் தன் அலுவல்களை முடித்துக் கொண்டு செய்துவிட்டு இன்று விமானத்தில் இந்தியாவுக்குப் புறப்படுகிறார். இவர் லண்டனில் மூன்று வாரம் தங்கியிருக்க உத்தேசித்திருந்தார்.

கிழக்கு இந்தியச் சங்கத்தில் அவர் இன்று மாலை இந்திய அரசியலமைப்புபற்றி பேசவிருந்தார். அவர் பிரசங்கம் இக்கமிட்டிக் கூட்டத்தில் படிக்கப்படும்.

## கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவை, முத்தமிழ் வளர்ச்சி மாநாடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடக்க இருக்கிறது.

பசுமலை நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

மாநாட்டுக்காகக் குறிப்பிட்டுள்ள தேதிகள்; மே மாதம் 27, 28, இடம்: ஆர். எஸ், புரம் உயர்நிலைப்பள்ளி மைதானம். தோழர் என். எஸ் கிருஷ்ணன்குழுவினரால் இசையும்; சி. என். அண்ணாதுரை குழுவினரால் நாடகங்களும் நடத்தப்படும்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**13 - 5 - 50**

ஆரணி:—சி. பி சிற்றரசு.

**14 - 5 - 50**

திட்டக்குடி:—சி. பி சிற்றரசு

(வேலூர் வேலப்பாடி):—என். வி. நடராசன்

## தி. மு. க. பொதுக்கூட்டங்கள்

### குரிசிலாபட்டு

குரிசிலாபட்டு, ஏப். 25—

21—4—50 அன்று தோழர் எம். ஏ. ராமகிருஷ்டிணன் அவர்கள் தலைமையில் தி. மு. க. சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம்நடைபெற்றது. தோழர்கள் இளங்கோ, மணிமொழியன், ச. பாலன் இன்னும் சில இயக்கத் தோழர்கள் பேசினார்கள். பின்னர் மின்னொளி என்ற சிறந்த நாடகம் மக்கள் மனதைக் கவரும் வகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் கே. ஜி. கோவிந்தசாமி அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### கன்னபுரம்

கன்னபுரம், மே. 6—

4—5—50 மாலை இவ்வூர் தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் தங்கவேல் தலைமை தாங்கினர், தோழர் தங்கராஜு அவர்கள் தி. மு. கழகம் சுயநல நோக்கம் கொண்டதல்ல வென்றும், அரசியல், பொருளியல், சமுதாய இயல் ஆகியவற்றில் முன்னேறுவதே அதன் இலட்சியமென்னக் குறிப்பிட்டுப்பேசினர்.

### வேலூர்

வேலூர், மே 2—

30—4—50 மாலை சமரசாமி முதலியார் டவுன் ஹால் வெளியில் தி. மு. கழகத்தின் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. தோழர் ம. ப. சா தி முன்மொழிய தோழர் இராசாகிருஷ்ணன் பின்மொழிய தோழர் ஏ. என். குப்புசாமி அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் தமது தலைமையுரை சொற்பொழிவாற்றியபின்தோழர் இளஞ்செழியன் பேசியபிறகு, தோழர் க. அன்பழகன் அவர்கள்பேசுகையில் திராவிடம் தனி ஆட்சி பெற்றால் தான் நம்மக்கள், நாடு, மொழி இவைகளைக் காப்பாற்ற முடியு மென்றும், சின்னஞ் சிறிய நாடுகளெல்லாம் தனித்து வாழும் போது ஐந்து கோடி மக்களுக்கு மேலுள்ள திராவிடர்கள் தனி ஆட்சி புரிய முடியாதாளென்றும், வடநாட்டின் சுரண்டலைப்பற்றியும் அறவே ஒழிக்கவேண்டும் என்றும் பேசி முடித்தார்.

அடுத்துத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில் நாம் வகுப்புவாதிகள் அல்லவென்றும், சமுதாய இழிவையும், சம உரிமை பெறவுமே நாம் பாடுபடுகிறோமென்றும் நாட்டின் தனியாட்சி இருந்தால் நம் மக்கள் வாழ்வு உயரும் வகையைச் செய்யவும்தக இனிய தமிழ் மொழியையும் காப்பாற்ற முடியுமென்றும் குறிப்பிட்டு பேசி முடித்தார். தலைவர் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.


வேல் வெளியீடு

## திருக்குறள்

எளிய நடையில்
தெளிவான உரை

526 பக்கங்கள் பரிசுக்கேற்ற
அழகான பைண்டு

விலை ரூ 4/-ம் தபால் கட்டணம் அணு 10-ம் முன்பணமாக அனுப்பி ஓர் புத்தகம்பெற்றுக்கொள்ளுங்கள்.

**விவேகாநந்தா அச்சகம்**
தளவாய்த்தெரு, மதுரை

K. K. ROW
HIGH CLASS GENT'S TAILOR & CONTRACTOR
84, Bells Road,
TRIPLICANE :: MADRAS 5.

VIJAYA INSTITUTE OF COMMERCE
84, Mulla Sahib St, G. T.
Shorthand, Typewriting & Book—Keeping Taught
Principal:-Y. N. Vijaya Pillay
D. Com, "IMC"


## மே நாள் விழா

### ராமபுரம்

பெல்லூர், மே 4—

சேத்துபட்டு கழகத்தின் சார்பில் 1-5-50 மாலை தோழர் க. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மே நாள் விழாக்கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் சே. முனிரத்தினம், இராமசந்திரன், நடேசன் ஆகியோர் மே நாளைப்பற்றி சொற்பொழிவாற்றினார்கள். கடைசியாக செயலாளர் நன்றி கூறிய கூட்டம் இனிது முடிந்தது.

### தூத்துக்குடி

தூத்துக்குடி, மே 4—

1—5—50 மாலை திரவியபுரம் தெருவில், சர்வகட்சியின் சார்பாக மே தின விழாவின்போது தோழர் எம். பால்பாண்டியன் தனிச் செங்கொடி ஏற்றிவைத்தார். காங்கிரஸின்சார்பாக தோழர் எஸ். அப்பாப்பிள்ளை, சோஷலிஸ்டின் சார்பாக தோழர் மரியதாஸ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தோழர் எம். ரத்தினம் ஆகியோர் மே தின விழாவைப் பற்றி விரிவுரையாற்றினார்கள். விழாவின் போது மூன்று கட்சிக் கொடிகளும் வானளாவப் பறந்தன.

### கிழக்கிலங்கை

மட்டக்களப்பு, மே. 2—

ஏறாவூரில் தோழர் சோ. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களின் தலைமையில் மேதின விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தலைவர் தமது தலைமையுரை ஆற்றியபின், தோழர் எம். அகமது லெவ்வை பேசும்போது மேதினத்தை நாம் கொண்டாடவேண்டிய அவசியத்தை விளக்கிப் பேசினார்.

அடுத்துத் தோழர்கள் எஸ். எம். சாலி, ஐ எச். எம். யூசுப் ஆகியோர் விழாவினை ஒட்டிப் பேசினர். தலைவரின் முடிவுரைக்குப் பின், சோவியத் கோல்ட் லாண்டு இறந்ததை யொட்டி இரு நிமிடங்கள் மௌனம் சாதிக்கப்பட்டது. நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.